සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது ]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**II ஆம் தர உதவி சுங்க அத்தியட்சகர்களுக்காக நடைபெறும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை - 2017 (I) (2018)**

Second Efficiency Bar Examination for Assistant Superintendents of Customs Grade II (New Syllabus) - 2017 (I) (2018)

**(01) சுங்க விதிகளும் பின்புலமும்**
Customs Law & Background

**மூன்று மணித்தியாலம்**
Three hours

- **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

**1.** சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 8 (1) பிரிவின் கீழ் நடத்தப்படும் சுங்க விசாரணை ஒன்றின் போது விசாரணை அலுவலருக்கு உதவும் அலுவலருடைய (Prosecuting officer) கடமைகளை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**2.** ஒரு சுங்க அலுவலராக நீர் விசாரணை மேற்கொள்ளும் போது சந்தேக நபர்களினால் சுங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட சில ஆவணங்கள் பொய்யானவை என வெளிக்கொணரப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் நீர் நடவடிக்கை எடுப்பீர்? சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அத்தகைய பிரிவின் கீழ் குற்றத்தை நிருபிப்பதற்கு விசாரணையின் போது உண்மையென நிறுவுவதற்கு நீர் எடுக்கவேண்டிய படிமுறைகள் என்ன? *(20 புள்ளிகள்)*

**3.** சர்வதேச ரீதியாக தடைக்கு உள்ளாகியுள்ள போதைப் பொருள் தொகுதியொன்று கொள்கலனொன்றில் மறைத்து வைக்கப்பட்டு இலங்கைத் துறைமுகமொன்றினூடாக எடுத்துச் செல்வதாக (Transit) உமக்கு தகவலொன்று கிடைக்கின்றது. இதன்போது சுங்கக்கட்டளைச் சட்டத்தினதும் வேறு இது தொடர்பான சட்டங்களினதும் கீழ் நீர் பின்பற்றும் செயல்முறை என்னவென்பதை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**4.** கொள்கலன் சோதனையிடும் முற்றமொன்றில் நீர் பணிபுரியும் போது கணினி முறைமையினால் அதி இடர் பொருள் (High Risk) எனத் தெரிவு செய்யப்பட்ட கொள்கலனொன்றை சோதனையிடுவதற்கு உமது மேற்பார்வையாளர் உம்மை நியமிக்கிறார். அக்கொள்கலனை நீர் சோதனையிடும் போது இறக்குமதிக்கு தடைசெய்யப்பட்ட சில பொருட்கள் காணப்படுகின்றன. இதன்போது சுங்கக்கட்டளைச் சட்டத்தினதும் வேறு இது தொடர்பான சட்டங்களினதும் பிரிவுகளின் கீழ் நீர் பின்பற்றும் செயல்முறையை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**5.** "சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி இறக்குமதியாளரோ அல்லது ஏற்றுமதியாளரோ குற்றமிழைப்பதை தடுப்பது சுங்கத் தடுப்பு அலுவலருடைய கடமையாகும்." இக்கூற்றை ஆய்வு செய்து விமர்சிக்குக. *(20 புள்ளிகள்)*

**6.** மூலப்பொருட்களை இறக்குமதி செய்து ஆடைகள் தயாரித்து ஏற்றுமதி செய்யும் நிறுவனமொன்றின் பிணைக்குதத்தில் சேமிக்கப்பட்டுள்ள அத்தகைய பொருட்கள் சுங்கத்தீர்வை செலுத்தப்படாமல் வெளியகற்றப்பட்டுள்ளதாக தகவலொன்று உமக்கு கிடைக்கின்றது. இதன்போது சுங்கக்கட்டளைச் சட்டத்தின் பிரிவுகளின் கீழ் பின்பற்ற வேண்டிய விசாரணை ஏற்பாடுகளை விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

**7.** சிறுகுறிப்பெழுதுக.

(i) இறக்குமதிக்காக தடை செய்யப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் (Goods Prohibited or Restricted for importation)

(ii) கப்பலில் ஏற்றும் ஒப்பந்தச்சீட்டு (Bill of Lading)

(iii) மீள் இறக்குமதி (Re-Import)

(iv) புலமைச் சொத்துரிமை சம்பந்தப்பட்ட பொருட்கள் (IPR related goods) *(05 × 4 = 20 புள்ளிகள்)*

**8.** மத்திய கிழக்கில் இரண்டு வருடங்கள் பணிபுரிந்த இலங்கைக்கு வருகை தந்த இலங்கையர் ஒருவர், தான் அங்கு கொள்வனவு செய்த பொருட்களை மூன்று மரப்பெட்டிகளில் தனது பிரயாணத்துடன் கொண்டு வரப்படாத பொதிகளாக, கப்பல் மூலம் கொண்டு வருகின்றார். அந்த பெட்டியின் சோதனையின் போது வணிக அளவில் பொருட்கள் காணப்படுகின்றன என அறியப்பட்டது. உதவிக் கட்டண அலுவலராக சுங்கக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நீர் பின்பற்றும் செயல்முறையை விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**II ஆம் தர உதவி சுங்க அத்தியட்சகர்களுக்காக நடைபெறும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை - 2017 (I) (2018)**

Second Efficiency Bar Examination for Assistant Superintendents of Customs Grade II (New Syllabus) - 2017 (I) (2018)

**(02)** சுங்க நடைமுறைகள்
Customs Procedure

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

- **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

**1.** கீழே குறிப்பிட்ட தலைப்புகளில் **நான்கைப்** பற்றிச் சிறுகுறிப்பெழுதுக.
   (i) பொருட் பார்வைப்பத்திரம் (Bill of sight)
   (ii) பண்டக பத்திரம் (Bill of store)
   (iii) அகற்றப்படாத மீதிக்கான விண்ணப்பம் (Extract)
   (iv) கப்பற் களஞ்சியம் (Ship's store)
   (v) கப்பற் பொருட்களின் ஆவணம் (Ship's cargo manifest) *(04 × 5 = 20 புள்ளிகள்)*

**2.** "ஒத்திசை முறைமை வகைப்படுத்தலின் (Harmonized Systems of Classification) கீழ் எத்தகைய பொருட்களின் வகைப்படுத்தலையும் முறையாகத் தீர்மானிக்க முடியும்."
இவ்வாசகத்தை சம்பந்தப்பட்ட ஒத்திசை முறைமை ஏற்பாடுகளின் கீழ் மதிப்பிடுக. *(20 புள்ளிகள்)*

**3.** சுங்க விலை மதிப்பீட்டு விதிகளின் (Customs Valuation Rules) கீழ் பொருட்களை விலை மதிப்பீடு செய்யும் போது விற்பவரும் (seller) வாங்குபவரும் (buyer) ஒருவரோடொருவர் தொடர்புடையவர்கள் (related) எனக் கருதப்படும் சந்தர்ப்பங்களை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**4.** விமான நிலையத்தின் பயணிகள் வருகைதரும் கருமபீடமொன்றில் உதவிக்கட்டண அலுவலராக நீர் பணிபுரியும் போது இந்நாட்டிற்கு வருகைதந்த சாதாரணமாக இலங்கையில் வசிக்கும் பயணி ஒருவர் (வெளிநாட்டு உல்லாசப் பயணி ஒருவரல்ல) தான் இந்நாட்டிற்கு கொண்டுவந்த 06 தங்க வளையல்களை சுங்கப் பிரகடனப்படிவத்திலே பிரகடனப்படுத்தி உம்மிடம் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக நீர் எடுக்கவேண்டிய படிமுறைகளை விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

**5.** கொழும்பு துறைமுகத்திலுள்ள பிணைக்குதமொன்றில் (bonded ware house) மின்னழுத்தி (Electric smoothing irons) தொகுதியொன்று குதத்தில் வைப்பிலிடப்பட்டு 02 வருடங்களுக்கும் மேலாக இன்று வரைக்கும் அகற்றப்படாமல் இருப்பதாக, கைத்தொழில் சேவைகள் பிரிவில் உதவி சுங்க அதிகாரியாக பணிபுரியும் உமக்கு அறிக்கை கிடைக்கப்பெறும்போது, நீர் எடுக்கவேண்டிய படிமுறைகளை விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

**6.** வழங்கல் சங்கிலி பாதுகாப்பை (supply chain security) உறுதிப்படுத்துவதற்காக பங்களிப்புச் செய்யும் வியாபாரிகளை (Traders) சுங்கம் தேர்ந்தெடுக்கும் முறைமையையும் அதற்கேற்ப அவர்களுக்கு நன்மைகளை (benefits) அளிக்கும் முறைமையையும் விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

**7.** இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தொகுதிகளை சுங்க இடர் முகாமைத்துவ உத்திகளின் (Customs Risk Management Techniques) கீழ் எவ்வாறு சுங்க சோதனைக்கு இலக்கு வைத்து (Target) தேர்ந்தெடுப்பது என விளக்குக. *(20 புள்ளிகள்)*

**8.** இறக்குமதியாளர் ஒருவர் தனது பொருட்கள் தொடர்பான புலமைச் சொத்துரிமையை (Intellectual Property Rights) பாதுகாப்பதற்கு இலங்கைச் சுங்கத்திற்கு எவ்வாறு உதவ முடியும் என விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

***